கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மேலூர் சட்டமன்ற தொகுதி கொட்டாம்பட்டி ஒன்றிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் ராஜராஜன், பழனி, தொகுதி பொறுப்பாளர் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில்

4 தொகுதிகளிலும் வெற்றிக் கனியைப் பறிப்போம்!

பாக முகவர்கள் பயிற்சிக் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் உறுதி!

சிவகங்கை, ஜூலை 2 –

சிவகங்கை மாவட்டத்தில் கழக தலைவர் முதல்வர் அவர்களின் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு என்ற செயலி உறுப்பினர் சேர்க்கை திட்டம் தொடங்க உள்ளது.

அதனை ஒட்டி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்ட மன்ற தொகுதிகளான சிவகங்கை, காரைக்குடி, மானாமதுரை, திரு ப்பத்தூர், ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான பி. எல் ஏ.2,பி.டி.ஏ. பாகமுகவர்கள் வாக்குச்சாவடி ஏஜெண்ட் ஆகியோர்களுக்கான பயிற்சி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது . நான்கு சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது.

கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற உன்னத திட்டத்தினை அறிவித்துள்ளார் . மொழி, இனம், மண் , காக்கிடவும் தமிழர்களின் மானத்தை காத்திடவும் ஓரணியில் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இந்த ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தினை அறிவித்துள்ளார் . தளபதி அவர்கள் ஜூன் ஒன்றாம் தேதி புதிய உறுப்பினர் சேர்க்கை திட்டத்தினை தொடங்கி வைக்க உள்ளார். ஆகஸ்ட் மாதத்திற்குள் அந்தந்த மாவட்டங்களில் புதிய உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் அந்தந்த ஒன்றிய, நகர ,பேரூர் கழக செயலாளர் பாகமுகவர்கள் அனைவரும் இணைந்து 30 சதவீதம் இளம் உறுப்பினர்களை உறுப்பினராக கழகத்தில் சேர்க்க வேண்டும். இப்பொழுதே தேர்தல்

பிரச்சாரத்தை நாம் தொடங்கிட வேண்டும். முன்பெல்லாம் தேர்தல் பத்து நாட்களுக்கு முன் பிரச்சாரம் துவங்கி தேர்தல் பணிகள் நடைபெறும் .நமது கழக தலைவர் அவர்கள் ஓராண்டுக்கு முன்பே தேர்தல் பணியினை தொடங்கிவிட்டார். படிப்படியாக இத்தகைய பணிகள் நடைபெற்று வருகின்றது.

நான்கு ஆண்டுகளாக திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் நலதிட்டங்கள் நிறைவேற்றி அதனை செயல்படுத்தி வருகிறார் .உறுப்பினர் சேர்க்கையின் பொழுது கழக கொடியுடன் நம்முடைய கழக அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறி புதிய உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் .இந்தியாவிலேயே உறுப்பினர் சேர்க்கையை வலுவுடன் நடத்தி உறுப்பினர் சேர்க்கும் ஒரே இயக்கம் கழகம் ஒன்றுதான். ஒன்றிய அரசின் நெருக்கடிகள் பல்வேறு வகையில் நமது அரசுக்கு உள்ளது. அதையெல்லாம் தாண்டி தனது வீயூகத்தி னால் முதல்வர் அவர்கள் அரசின் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் .தமிழகம் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று உள்ளது. ஒன்றிய அரசு நன்மை பயக்கும் திட்டங்களுக்கு நிதிகள் தராவிட்டாலும் அரசின் வருமானத்தை பல்வேறு வகையில் உயர்த்தி அத்தகைய திட்டங்களை முதல்வர்கள் நிறைவேற்றி வருகிறார் .நாம் வீடுகளில் திண்ணைப் பிரச்சாரம் செய்து 30 சதவிகிதம் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் .இதன் மூலம் கழகத் தலைவர் அவர்கள் விரும்புகின்ற 200 தொகுதிகளுக்கு மேல் நாம் எளிதாக வெற்றி விட முடியும் .இந்த வெற்றியினை.

2026 சட்ட மன்ற தேர்தலில் பெற்று வரலாற்று சாதனைகளை படைத்திட வேண்டும். தளபதி அவர்கள் 24 மணி நேரத்தில். ஓய்வு இல்லாமல் ஓய்வறியாமல் அயராது உழைத்து வருகிறார். நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் 22 3தொகுதிகளில் கழகம் கூடுதலாக வாக்குகள் பெற்றுள்ளது. அதன்அடிப்படையில் நாம் ஒன்றிணைந்து பணியாற்றினால் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் எளிதாக வெற்றி பெற முடியும். சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் நான்கு தொகுதிகளிலும் கழகம் நூறு சதவீத வெற்றி பெற்று கழக தலைவர் தளபதி அவர்களின் அவர்களிடம் இந்த வெற்றிக்கனியை சமர்ப்பிப்போம்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார் .

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சட்ட மன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் .எஸ்.சுந்தர்ராஜ், பி.கே . என். போஸ் ,திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் .எல். ஏ மாவட்ட கழக துணை செயலாளர் த. சேங்கை மாறன்ஆகியோர் பேசினார்கள் . இந்த கூட்டத்தில் மேயர் எஸ் .முத்து துரை ,துணை மேயர் காரைக்குடி மாநகர செயலாளர் நா. குணசேகரன் , நகர்கழகச் செயலாளர்கள் ,பெரி. பாலா, சி.எம் துரை. ஆனந்த், க.பொன்னுச்சாமி, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன் எஸ்.மாரியப்பன் கென்னடி,,ஒன்றிய கழக செயலாளர் செயலாளர்கள் சுப. சின்னத்துரை ,நாகனி ரவி, வே. பூபால சிங்கம் ,லெ.மு.ரவிச்சந்திரன் நா. நெடுஞ்செழியன், குன்னக் குடி சுப்பிரமணியன் ,கே எஸ். ஆனந்த்,எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம் ,பூமிநாதன்,பி. செல்வராஜ் ,திருமலை முத்துராமலிங்கம், எம் . ஜெயராமன், பெ. மந்த காளை ,துரை. ராஜாமணி, மா அண்ணாத்துரை,

அ. முத்துச்சாமி ,ஆறு செல்வராஜன், வே.தமிழ்மாறன், கா. வெங்கட்ராமன் எம்.ஏ .கடம்ப சாமி சுப்பிரமணியன், திருமதி வசந்தி சேங்கைமாறன், ஆர். எம் .கென்னடி, வே.ஆரோக்கியசாமி யோக. கிருஷ்ணகுமார் பேரூர் கழக செயலாளர்கள் ஜெயராமன், ராசு ,அசோக் ,ஆர். கார்த்திகேயன், பி.கதிர் வேல் கே .பி. எஸ் பழனியப்பன், நாகூர் கனி பி.ஏ. நஜ்மூதீன்,பொதுக்குழு உறுப்பினர்கள் கரு .அசோகன், பள்ளத்தூர் கே. எஸ் .ரவி நிர்வாகிகள் ராம. ரவி, மதார், பேருராட்சி மன்ற தலைவர்கள் திருமதி கோகிலா ராணி நாராயணன், ராதிகா, துணைத் தலைவர் காண்முகமது,

நகராட்சி துணைத் தலைவர் பாலா சுந்தர் , மாவட்ட மகளீரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் , நிர்வாகிகள் திலகவதி கண்ணன், செல்வராணி,அயலக அனி சன் சீமான் சுப்பையா, மாவட்ட இளை ஞர் அணி துணை அமைப்பாளர் கள் மதிவாணன் பரணிகிட்டு,நிர்வாகிகள் தமிழ் நம்பி,ஒய்கா.சோமசுந்தரம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ் .முத்துக்குமார் சிவபுரி சேகர், பொருளாளர் ஏ.எம்.கண்ணன், சேவியர் ,தொ.மு.ச.முருகேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது , அமைப்பாளர் சிங்கமுத்து ,உட்பட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள். ஓரணி யில் தமிழ்நாடு என்ற செயலி பயிற்சியினை தகவல் தொழில் நுட்பஅணிஅமைப்பாளர் கள் சசி வர்ணம்,காளிமுத்து பேராசிரியர் சிவா ஆகியோர் அளித்தார்கள்.

தன்னலமற்ற சேவைகளால்

போற்றுதலுக்குரியவர்கள் மருத்துவர்கள்!

தேசிய மருத்துவ தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 2 –

தன்னலமற்ற சேவைகளால் போற்றுதலுக்குரியவர்களாக திகழ்கிறார்கள் மருத்துவர்கள் என்று தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

எளிய பின்புலங்களில் இருந்து வந்து, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை வலிமைப்படுத்தி, மக்களின் நலன் காக்கும் தலைசிறந்த மருத்துவர்கள் அனைவருக்கும் தேசிய மருத்துவர்கள் தின வாழ்த்துகள்!

தன்னலமற்ற சேவைக்குச் சொந்தக்காரர்களான நமது மருத்துவர்கள் அனைவருமே போற்றுதலுக்குரியவர்கள்! அவர்களது சேவைக்கு நமது நன்றியின் அடையாளமாகத் தலைசிறந்த 50 மருத்துவர்களுக்கு இன்று விருதுகள் வழங்கி மகிழ்கிறோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும்:

கடமை தவறினால் கடும் நடவடிக்கை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 2-

குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் யாராக இருந்தாலும் கடமை தவறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டம் ஒழுங்கு ஆய்வு கூட்டம் நிறைவடைந்த பின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

குற்றங்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும்!

மீறி நடந்தால் அதில் ஈடுபட்டவர் ரவுடியானாலும், அரசியல் பின்புலம் கொண்டவரானாலும், காவலரே ஆனாலும் அதற்கான தண்டனையை விரைவில் பெற்றுத் தந்து நீதி நிலைநாட்டப்படும் ஆட்சியாகத்தான் திராவிட மாடல் அரசு திகழ்ந்து வருகிறது.

‘‘போதைப் பொருள்-கள்ளச் சாராயம் - பெண்கள் பாதுகாப்பு - லாக்கப் மரணங்கள் போன்றவற்றில் யார் கடமை தவறினாலும் அரசின் நடவடிக்கை மிக மிக கடுமையாக இருக்கும்’’ என்பதைச் சட்டம் - ஒழுங்கு குறித்த இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தினேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட மாடல் அரசு –

முதல்வர் - துணை முதல்வரின் சாதனை திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைப்பீர்!

அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஜூலை 2 -

வாக்குச் சாவடி முகவர்கள் மாற்றுக் கட்சியினரின் சூழ்ச்சிக்கு இடம் அளிக்காமல் தேர்தல் பணியாற்ற வேண்டும் என்றதோடு தமிழக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் மாண்புமிகு முதல்வர் மற்றும் துணை முதல்வரின் சாதனை திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் தினசரி தவறாமல் எடுத்துரைக்க வேண்டும் என்று வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர்; சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொத்தப்புள்ளி ஊராட்சி, அழகுபட்டி, சில்வார்ட்டி 5 ஊராட்சிகளை சேர்ந்த பாக முகவர்களுக்கான (வாக்குச்சாவடி முகவர்கள்) ஆலோசனைக் கூட்டம் திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் தலைமையில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பாக முகவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், தினசரி ஒய்வறியா சூரியன்திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனை திட்டங்கள் செயல்பாடுகள் மற்றும் கழக பணிகள் குறித்த செய்திகள் மற்றும் துணை முதல்வரின் சாதனை திட்டங்கள் அவர் வழங்கிய நலத்திட்டங்கள் குறித்த செய்திகள் தினசரி உங்கள் கைபேசிக்கு (செல்போன்) வருகிறது.அவற்றை உடனுக்குடன் நீங்கள் கட்சித் தொண்டர்கள் பொதுமக்கள் மத்தியில் எடுத்துரைத்து திமுக அரசின் சாதனைகளை எடுத்துரைக்க வேண்டும் என்றார். பாக முகவர்களாகிய நீங்கள் களப்பணியாற்றும் போது கழக நிர்வாகிகளுடன் ஒற்றுமையாக செயல்பட வேண்டும். நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கக் கூடாது. நம்முடைய ஒரே இலக்கு 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிக்கு மேல் வெற்றி பெற செய்து கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை மீண்டும் முதல்வர் நாற்காலியில் அமர வைக்க வேண்டும். அதற்கான ஆலோசனைக் கூட்டம் தான் இன்று நடைபெற்றுள்ளது. கடந்த 10 நாட்களாக பொதுமக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெறும்போது அவர்கள் தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சிநாயகன் கழகத்தலைவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் சட்டமன்ற தேர்தலில் அவர்கள் நமக்கு வாக்களிக்க தயாராகஇருப்பதையும் தெரிந்து கொண்டேன். இதை உணர்ந்து மாற்றுக் கட்சியினரின் சூழ்ச்சிக்கு இடம் அளிக்காமல் ஒற்றுமையுடன் தேர்தல் பணி ஆற்ற வேண்டும். குறிப்பாக வாக்குச்சாவடிகளில் விழிப்புடன் செயல்பட்டு ஒரு ஓட்டு கூட வீணாகாமல் நமக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும். அடிமட்ட தொண்டன் முதல் கழக நிர்வாகிகள் வரை யாரையும் கழகம் கைவிடாது உரிய நேரத்தில் அவருக்குரிய பதவிகளும் நலத்திட்டங்களும் வந்து சேரும் என்றார். அதன்பின்னர் பாகமுகவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளை தனித் தனியாக அழைத்து அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள குறைகள் மற்றும் செயல்படுத்த வேண்டிய நலத்திட்டங்கள் குறித்து கேட்டறிந்து உடனடியாக அப்பகுதியில் நலத்திட்ட பணிகள் தொடங்கப்படும் என்றார். நிகழ்ச்சியின் போது ஆத்தூர் தொகுதி தேர்தல் பொருப்பாளர் கள்ளிப்பட்டி மணி,திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மணி, நெடுஞ்செழியன், முருகேசன், கீழ்மலை ஒன்றிய செயலாளர் கே.சி.பட்டி அய்யப்பன், மேல்மலை செயலாளர் சுரேஷ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமை ப்பாளர் இல.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்:

திருப்பத்தூர் ஒன்றியத்தில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

கழக முன்னணியினர் சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 2 -

கழகத் தலைவர் முதல்வர் தலைவர் அவர்களின் ஆலோசனைபேரில் மாநில இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் தமிழ் நாடு முழுவதும் நாடு போற்றும் நான்கான்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் 102 ஆவது பிறந்தநாள் பொதுக்கூட்டம் நடைபெற்று வருகின்றது .

அதன் படி சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய திமுக மற்றும் திருப்பத்தூர் பேருர் கழக இளைஞரணி சார்பாக கண்டவராயன் பட்டி, பையூரில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வைகை.ச. இளமாறன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி பா. செந்தில் குமார் ஒன்றிய கழகச் செயலாளர் சோ .சண்முக வடிவேல் பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இரா. சேதுபதி ராஜா வரவேற்று பேசினார் .

இந்த தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் திருமதி தமிழ் பிரியா தலைமை கழக பி.ஜோஸிஅபர்ணா இளம் பேச்சாளர் ஆகியோர் சிறப்புரையாற்றினார் கள்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய அவைத்தலைவர் சோ திருநாவுக்கரசு, ஒன்றிய துணைச் செயலாளர் எஸ் .பார்த்தசாரதி , ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன் , இளைஞர் அணி நிர்வாகிகள் எஸ். ரமேஷ் ,பழனி குமார் ,என். ஆர். சகாதேவன், பி. அழகு ராஜா ,எம். ஜெகதீஷ் குமார், எம். நாகராஜன் , எஸ் .கார்த்திக் குமார் ,மற்றும் ஒன்றிய ஊராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார் கள்.

திருப்பத்தூர். பேரூர் .கழக இளைஞரணி சார்பில் அண்ணா சிலை அருகில் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் அ.பஷீர் அகமது தலைமையில் மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் நாகனிபா. செந்தில்குமார் ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.சண்முகவடிவேல், பேரு ர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது . மாவட்ட இளைஞரணிஅமைப் பாளர் இரா. சேதுபதி ராஜா வரவேற்று பேசினார் . இந்த கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா, தலைமை பேச்சாளர் பிஜோசிஅபர்ணா ஆகியோர் சிறப்பு ரை ஆற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், துணைத் தலைவர் ஆர். காண்முகமது ,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே.எஸ் .நாராயணன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் என்.எம். சாக்ளா பேருர் கழக நிர்வாகிகள் ராம. ரவி .உதயசண்முகம், பிச்சை முகமது, எஸ் பரமேஸ்வரி, எம் .சுரேஷ் குமார் ,எஸ் .மதியழகன் சோ .வைரமணி , பூக்கடை பாண்டியன், வார்டுகழக நிர்வாகிகள் முகமது மீரா, போ .அப்துல் காதர்,

அம்பலம், நோ .சாகுல் அமீது ,ஸ்டாலின், ரா. விஜயன், ஆர். ராஜசேகரன், லோ. நாகராஜன் ,பாஸ்கர பாண்டியன், கோ. ஸ்டீபன் ,ஜெயராஜ் , முஹமது அலி ஜின்னா மே. குமார், ராமசாமி ,அந்தோணிஇளைஞரணி துணை அமைப்பாளர் கள் கருணாநிதி மனோகரன் , ப . அ பு தா கீ ர் , மா . முத்துகுமார், ஜெயராஜ், சித்தரஞ்சன் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். பேரூர் இளைஞரணி அமைப்பாளர்அ. பஷீர் அகமது தலைமையில் துணை அமைப்பாளர்கள் கருணாநிதி மனோகரன், ப. அபுதாஹிர் ,மா. முத்துக்குமார் ஆகியோர் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

தென்காசி மாவட்டத்தில்

ரூ.72.54 லட்சத்தில் பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

தென்காசி, ஜூலை 2 -

தென்காசி மாவட்டம் தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று ரூ.72.54 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளின் மூலம் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து பல்வேறு துறைகளின் மூலம் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ள புதிய பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.தென்காசி சட்ட மன்ற உறுப்பினர் எஸ். பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் எண்ணற்ற நலத்திட்ட உதவிகளை வழங்கி துறைகளின் மூலம் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் தென்காசி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக்கட்டிடத்திற்கும், செங்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கை வசதி களுடன் கூடிய தீவிர சிகிச்சை பிரிவு கட்டடங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.கிளாங்காடு ஊராட்சியில் ரூ.46.25 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி செயலகம் கட்டிடமும், வீ.கே.புதூர் வட்டம் சுரண்டை குறுவட்டத்தில் ரூ.26.29 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 62 பயனாளிகளுக்கு ரூ.68.20 இலட்சம் மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர்களும்,22 பயனாளிகளுக்கு ரூ.02.97 இலட்சம் மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும் என மொத்தம் 84 பயனாளிகளுக்கு ரூ.71.17 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தென்காசி ஊராட்சி ஒன்றியத்தில் ஈப்பு ஓட்டுநராக பணிபுரிந்து பணியிடை காலமான ஓட்டுநரின் வாரிசுக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறுஅமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ,மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் உதயகிருஷ்ணன்,தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் கனகராஜ் முத்துப்பாண்டியன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ்,தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர்,

மாவட்ட பொருளாளர் ஷெரிப், துணைச் செயலாளர்கள் கனிமொழி,கென்னடி,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, முத்துப்பாண்டி, ஆறுமுகசாமி, சேசுராஜன்,பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், சாமிதுரை, ஒன்றிய செயலாளர் வல்லம் திவான் ஒலி, ரமேஷ், பொன் செல்வன்,அழகு சுந்தரம், நகர செயலாளர்கள் வெங்கடேஷ்,பீரப்பா, கணேசன்,அப்பாஸ்,பேரூர் செயலாளர்கள் குட்டி, முத்தையா, சுடலை,அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, கருப்பணன், துணை அமைப்பாளர் ஐவேந்திரன் தினேஷ், ஊராட்சி மன்ற தலைவர் சத்யராஜ்,வலசை வேலுச்சாமி, ஜமீன் பாத்திமா,அருணாசலம், ஆவுடையம்மாள், ஈஸ்வரி, மைதிலி, சந்திரசேகரன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக நிர்வாகிகள்,அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.